# பகுதி IV


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, பற்றுக்கள் வரி (திருத்தச்) சட்டம் | I |
| 2. | 2007ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் | II |
| 3. | 2007ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச் சட்டம் | IV |
| 4. | 2007ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டம் | XIV |
| 5. | 2007ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தச்சட்டம்) | XIV |
| 6. | 2007ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்சட்டம்) | XV |

## 2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, பற்றுக்கள் வரி (திருத்தச்) சட்டம்

[2007ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

### 2002ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, பற்றுக்கள் வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பற்றுக்கள் வரிச் சட்டம் "வர்த்தக வங்கி அல்லது ஒரு விசேட வங்கி " என்னும் சொற்கள் அச்சட்டத்தின், 5ஆம் பிரிவிலும், 6ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவிலும், 9ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவிலும், 10ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவிலும், 14ஆம் பிரிவின் (1)ஆம், (2)ஆம் உட்பிரிவுகளிலும் 15ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவிலும், 18ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவிலும் தவிர வேறு எங்கெங்கு காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் அவற்றிற்குப் பதிலாக, "வர்த்தக வங்கி , விசேட வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவு, 3ஆம் பிரிவு, 4ஆம் பிரிவு, 9ஆம் பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவு, 13ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ),(இ), மற்றும் (ஈ) என்னும் பந்திகள் அத்துடன் 13ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவில் "வர்த்தக வங்கியொன்று" எனும் சொற்களுக்குப் பதிலாக, "வர்த்தக வங்கியொன்று அல்லது விசேட வங்கியொன்று" எனும் சொற்களை இடுவதன் மூலம் அப் பிரிவுகள் திருத்தப்படுகின்றன.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் நடைமுறைக் கணக்கு பற்றிய வரைவிலக்கணத்தில் "ஒரு வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்கூறிலுள்ள ஒரு கணக்கு அத்துடன் ஒரு பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒரு வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணயக்கணக்கு, வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற் கூறிலுள்ள ஒரு கணக்கு, ஒரு பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு அத்துடன் திறைசேரிமுறி முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு " என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் சேமிப்புக் கணக்கு பற்றிய வரைவிலக்கணத்தில் "உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றில் பேணப்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில், உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றில் அல்லது நிதிக் கம்பனியொன்றில் பேணப்படும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

5. இச் சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2007ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

[2007ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

## 2006ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும், 2005ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும் மற்றும் 2002ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தையும் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச் சட்டம் 2007ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

### பாகம் I

### 2006ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத்திருத்துதல்

2. (இதனகத்துப் பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும் 2006ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதி (மோட்டார் வாகன சலுகை அறவீடு) சட்டத்தின் பாகம் 1 அதன் 2ஆம் பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை அதன் (ஆ) (i) என்னும் பந்தியாக மீள எழுத்திடுவதன் மூலமும்;

(2) மீள எழுத்திடப்பட்ட (ஆ) (i) என்னும் பந்தியைப் பின்வருமாறு திருத்துவதன் மூலமும் :-

(i) " தனியாள் ஒவ்வொருவரிடமிருந்தும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, " 2006 மாச்சு 31ஆந் தேதி தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்குத் தனியாா் ஒவ்வொருவரிடமிருந்தும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ii) " வரிகளினதும் அறவீடுகளினதும் கூட்டு மொத்தத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும் :-

"அத்தகைய தனியாள் கடன் பத்திரம் ஒன்றைத் திறப்பதன் மூலம் இறக்குமதி நடைமுறையைத் தொடங்கியிருக்குமிடத்து, வரியினதும் அறவீடுகளினதும் கூட்டு மொத்தத்தில்" ;

(3) மீள் எழுத்திடப்பட்ட (ஆ) (i) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ii) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், மேற்படி (i) ஆம் பந்தியின் நியதிகளின்படி அதில் குறிப்பிடப்பட்ட இச்சலுகையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளாத ஒவ்வொரு தனியாளிடமிருந்தும் அல்லது 2001 ஏப்பிறல் 1ஆந் தேதி தொடங்கும் தொடர்ச்சியான எவையேனும் ஐந்து வரி மதிப்பீட்டு ஆண்டுகள் தொடர்பில், விடயத்திற்கேற்ப 2000ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அல்லது 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்று தொடர்பிலும் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் குறையாத (ரூபா 250,000/-) தொகையொன்றைக் கொண்ட வருமான வரியைச் செலுத்தியுள்ளவரும் ஆணையாளர் தலைமையதிபதியால் அவ்வாறு சான்றுபடுத்தப்பட்டுள்ளவருமான, அமைச்சரால் வர்த்தகமானியில் வெளியிடப்படும் கட்டளையால் அனுமதிக்கப்பட்ட வாகனமொன்றாகத் தீர்மானிக்கப்படக் கூடியவாறான பிரிவொன்றுக்குட்பட்ட மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்யும் தனியாள் ஒவ்வொருவரும், அத்தகைய இறக்குமதியின் நேரத்தில் சுங்கக் கட்டளைச் சட்டத்தினதும் (அத்தியாயம் 235) 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினதும் அத்துடன் 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச்சட்டத்தினதும் நியதிகளின்படி அத்தகைய தனியாள் செலுத்துவதற்காளாகும் ஏதேனும் வரியின் அல்லது பண அறவீட்டு கூட்டுமொத்தத்தின்மீது, அமைச்சரால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதத்தின்படி அல்லது வீதங்களின்படி கணிப்பிடப்பட்ட, இப்பாகத்தின் கீழ் செலுத்தற்படற்பாலதான அறவீட்டை அத்தகைய இறக்குமதியின் நேரத்தில் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(iii) இப்பாகத்தின் (i) ஆம் (ii) ஆம் உட்பந்திகளின் நோக்கங்களுக்காக, "இச்சட்டம் தொடங்கும் தேதி" என்னும் சொற்றொடரானது, 2007ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் நடைமுறைக்கு வரும் தேதி என்று பொருள்படும்." ; அத்துடன்

(4) இப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(3) ஐந்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியைக் கணிப்பிடுகையில் ஒருமுறை கணக்கிற்கெடுக்கப்பட்ட எதேனும் வரிமதிப்பீட்டாண்டு அதன் பின்னர் ஐந்து ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதியைக் கணிப்பிடுகையில் கருத்திற் கொள்ளப்படுதலாகாது.".

3. இச் சட்டத்தால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) (i) ஆம் பந்தியில் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும், 2006, மார்ச் 31ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் II

## 2005ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் III என்பதனைத் திருத்துதல்

4. இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டின் 5ஆம் இலக்க, நிதி (நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு) சட்டத்தின் பாகம் III இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பாகத்தின் 14ஆம் பிரிவில்"(நிபமஅறி என அதனகத்துப் பின்னர் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணப்பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :-

(2) அப்பாகத்தின் 15ஆம் பிரிவில் -

(அ) "(நிபமஅ நிறுவனத்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில் "நிபமஅறி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி " என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பாகத்தின் 17ஆம் பிரிவில் "நிபமஅறி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி " என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) அப்பாகத்தின் 18ஆம் பிரிவில் "நிபமஅறி" இயைபான ஒப்பந்தக்காரர்களினால் 2005, சனவரி 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் செய்து கொள்ளப்படும் ஒவ்வொரு ஒப்பந்தத்தின் மீதுமான மொத்த விற்பனை வரவு தொடர்பாக அதனால் சேகரிக்கப்படும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணையாளர் தலைமையதிபதி இயைபான ஒப்ந்தக்காரர்களினால் 2005 சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செய்து கொள்ளப்படும் ஒவ்வொரு ஒப்பந்தத்தின் மீதுமான மொத்த விற்பனை வரவு தொடர்பாக அவரால் சேகரிக்கப்படும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(5) அப்பாகத்தின் 19ஆம் பிரிவில் அதன் உட்பிரிவுகள் (2), (3), (4), (5) அத்துடன் (6) என்பவற்றில் "நிபமஅறி" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக, "உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(6) அதன் 20ஆம் பிரிவில் -

(அ) "நிர்மாண ஒப்பந்தக்காரர்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்திற்கு நேர்முன்னராகப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

"உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி" என்பது 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) "நிர்மாண, பயிற்சி அபிவிருத்திக்கான நிறுவகம் (நிபமஅறி)" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கஞ் செய்வதன் மூலமும்;

(7) அதன் 22ஆம் பிரிவில் அப்பிரிவின் முடிவில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

" இப்பிரிவின் நோக்கங்களுக்காக "நிபமஅறி" என்பது 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 3ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு, 1992, யூன் 10ஆம்தேதிய 718/15 ஆம் இலக்க,

அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைத்து உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட கைத்தொழில் பொறுப்பு முயற்சியொன்றாகிய நிர்மாண, பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகம் என்று பொருள்படும்.".

5. இச் சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2007ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, கணினி வழிக் குற்றச் சட்டம்

[2007ஆம் ஆண்டு யூலை மாதம் 09ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### கணினிவழிக் குற்றத்தை அடையாங்காணுவதற்கும் அத்தகைய குற்றங்களின் புலன் விசாரணை மற்றும் தடை செய்தலுக்கான நடவடிக்கை முறைகளை ஏற்பாடு செய்வதற்கும் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

1. இச்சட்டம் 2007ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, கணினிவழிக் குற்றச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் நியமிக்கின்றவாறான (இதனகத்துப் பின்னர் " நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய திகதியில் வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2.(1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் -

(அ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் சமுகமாயிருக்கும்போது ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரியுமிடத்து;

(ஆ) இச் சட்டத்தின் கீழ் தவறொன்றாக அமையும் செயலினால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்டிருந்த கணினி, கணினிமுறைமை, அல்லது தகவல், சார்புடைய நேரத்தில் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் இருந்தவிடத்து;

(இ) ஏதேனும் கணினித் தேக்கம், அல்லது தரவு அல்லது தகவல் செய்முறைச் சேவை உட்பட, இச் சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகையில் பயன்படுத்தப்பட்ட வசதி அல்லது சேவை முக்கியமான நேரத்தில் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் தளம் பெற்றிருந்தவிடத்து; அல்லது

(ஈ) இச் சட்டத்தின்கீழ் தவறொன்று புரியப்பட்டதன்மூலம் அரசுக்கு அல்லது இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிவுள்ள ஆளொருவருக்கு இலங்கையில் அல்லது வெளிநாட்டில் நட்டம் அல்லது சேதம் ஏற்படுமிடத்து,

ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்கு " ஆள் " என்பது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்களின் குழுவொன்றை உள்ளடக்கும்.

#### பாகம் I

#### கணனிவழிக் குற்றம்

3. தமக்காகவோ அல்லது வேறு எவரேனும் ஆளுக்காகவோ -

(அ) ஏதேனும் கணினிக்கு; அல்லது

(ஆ) ஏதேனும் கணினியில் வைத்திருக்கப்படும் ஏதேனும் தகவலுக்கு,

அணுக்கத்தை பெறுவதற்கு சட்டமுறையான அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை என அறிந்திருந்தும் அல்லது அவ்வாறு நம்புவதற்குக் காரணமிருந்தும், அத்தகைய அணுக்கத்திற்கான நோக்கில் உளக்கருத்துடன் ஏதேனும் செயலைச் செய்கின்ற ஆளெவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்பபளிக்கப்பட்டதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

4. தமக்காகவோ அல்லது வேறு எவரேனும் ஆளுக்காகவோ -

(அ) ஏதேனும் கணினிக்கு; அல்லது

(ஆ) ஏதேனும் கணினியில் வைத்திருக்கப்படும் ஏதேனும் தகவலுக்கு,

அணுக்கத்தை பெறுவதற்கு சட்டமுறையான அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை என அறிந்திருந்தும் அல்லது அவ்வாறு நம்புவதற்குக் காரணமிருந்தும், இச் சட்டத்தின்கீழ் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தன்கீழ் ஏதேனும் தவறைப்புரியமுளக்கருத்துடன் அத்தகைய அணுக்கத்திற்கான நோக்கில் உளக்கருத்துடன் ஏதேனும் செயலைச் செய்கின்ற ஆளெவரும், தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் அத்துடன் வேறு ஏதேனும் சட்டத்தின் கீழான தவறொன்றின் விடயத்தில், அத்தகைய மற்றைய தவறைப் புரிய எத்தனிக்கும் தவறுக்கென விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும்.

விளக்கம் 1 - பந்தி (அ) என்பதன் நோக்கங்களுக்கு கணினியொன்றை வெறுமனே முடுக்கிவிட்டாலே போதுமானதாகும்

விளக்கம் 2 - பந்தி (ஆ) என்பதன் நோக்கங்களுக்கு-

(அ) ஏதேனும் கணினியில் வைத்திருக்கப்படும் ஏதேனும் செய்நிரலை அல்லது தரவைப் பெற்றுக் கொள்ளும் முன்னம் ஒன்றிருத்தல் வேண்டும்;

(ஆ) பெற்றுக் கொள்வதற்கு முன்னப்பட்ட அணுக்கம் அதிகாரமளிக்கப்படாததாயிருத்தல் வேண்டும்;

(இ) ஏதேனும் குறிப்பிட்ட செய்நிரலுக்கு, தரவுக்கு அல்லது கணினிக்குத் திசைதிருப்பப்பட்ட அணுக்கத்தைக் கொண்டிருத்தல் அவசியமல்ல.

5. ஏதேனும் பணி, ஏதேனும் கணினிக்கு அல்லது கணினி முறைமைக்கு அல்லது கணினி செய்நிரலுக்கு அதிகாரமளிக்கப்படாத திரிபுபடுத்தலை அல்லது சேதத்தை அல்லது சாத்தியமுள்ள சேதத்தை விளைவிக்குமென அறிந்துகொண்டு அல்லது நம்பவதற்குக் காரணமாயிருந்து உளக்கருத்துடனும் சட்டமுறையான அதிகாரமின்றியும் கணினியைக் கொண்டு ஏதேனும் அத்தகைய பணியைச் செய்ய வைக்கும் ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கப்படக் கூடிய காலப்பகுதிக்கு, இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**விளக்கங்கள்**

ஏதேனும் கணினிக்கு, கணினி முறைமைக்கு அல்லது கணினி செய்நிரலுக்கு ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத திரிபுபடுத்தல் அல்லது சேதம் அல்லது சாத்தியமுள்ள சேதம் இடம்பெறுவதற்கு பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று இடம்பெறலாம் -

(அ) ஏதேனும் கணினியின் இயக்கத்தைக், கணினி முறைமையை அல்லது ஏதேனும் கணினியில் தேக்கி வைத்திருக்கப்படும் ஏதேனும் தரவின் அல்லது தகவலின் நம்பகத்தன்மையை சீர்குலைத்தல் ;

(ஆ) ஏதேனும் கணினியில் தேக்கி வைத்திருக்கப்படும் ஏதேனும் தகவலை அழித்தல், நீக்குதல் அல்லது சிதைத்தல், அதனுடன் வேறெதனையும் சேர்த்தல், நகர்த்துதல் அல்லது மாற்றுதல் ;

(இ) தரவைத் தேக்கிவைப்பதற்கு அல்லது தரவை மீண்டும் வெளிக் கொணர்வதற்கு கணினி நேரத்தையும் தரவுமுறை வழிப்படுத்துதலையும் ஈடுபடுத்தும் கணினிச் சேவையொன்றைப் பயன்படுத்துதல் ; அல்லது

(ஈ) கணினியொன்றின் பிறழ்செயற்பாட்டின் பயனையுடைய அல்லது ஏதேனும் கணினியில் அல்லது கணினி முறைமையில் வைத்திருக்கப்படும் தரவை அல்லது தகவலை மோசடியாக மாற்றுகின்ற கணினி செய்நிரல் ஒன்றை அறிமுகம் செய்தல்.

விளக்கம் - மேலே (அ) முதல் (ஈ) வரையிலான பந்திகளின் நோக்கங்களுக்கு அதன்கண் குறிப்பீடு செய்யப்பட்ட விளைவாந்தன்மைகள் இயல்பில் தற்காலிகமானவையாக இருந்தனவா அல்லது நிரந்தரமானவையாக இருந்தனவா என்பது பொருட்டல்ல.

6. (1) அத்தகைய பணி -

(அ) தேசிய பாதுகாப்பிற்கு;

(ஆ) தேசிய பொருளாதாரத்திற்கு ; அல்லது

(இ) பொதுமக்களின் பாதுகாப்பிற்கு,

ஆபத்தை அல்லது உடனிகழக்கூடிய ஆபத்தை விளைவிக்குமென அறிந்து கொண்டு அல்லது நம்புவதற்குக் காரணமாயிருந்து உளக்கருத்துடன் கணினியொன்றைக் கொண்டு ஏதேனும் அத்தகைய பணியைச் செய்ய வைக்கும் ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையால் தண்டிக்கப்படற்பாலதாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் பந்தி (அ) அல்லது (இ) என்பதன் கீழ் தவறொன்றிற்கான துடர்ச்சியொன்றில், விடயத்திற்கேற்ப தேசிய பாதுகாப்பு அல்லது பொதுமக்கள் ஒழுங்கு அல்லது தேசிய பொருளாதாரம் தொடர்பில் முறையே (1)ஆம் உட்பிரிவில் எதிர்பார்க்கப்பட்ட நிலைமை உண்மையிலேயே நிலவியது எனக் குறிப்பிட்டு பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் கைப்பட்ட சான்றிதழொன்று அல்லது (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான தவறொன்றுக்கான துடர்ச்சியொன்றில் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சச் செயலாளரின் கைப்பட்ட சான்றிதழொன்று சாட்சியத்தில் ஏல்தகவாதல் வேண்டும் என்பதுடன் அதன்கண் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளின் முதற்தோற்றச் சான்றாதாலும் வேண்டும்.

7. கணினியொன்றிடமிருந்து அல்லது கணனியொன்றின் தேக்க ஊடகத்திலிருந்து தகவல் சட்டமுறையான அதிகாரமின்றிப் பெறப்பட்டுள்ளது என அறிந்துகொண்டும் அல்லது நம்புவதற்குகாரணமிருந்தும் அத்தகைய ஏதேனும் தகவலை :-

(அ) கொள்வனவு செய்கின்ற, பெற்றுக்கொள்ளுகின்ற, வைத்திருக்கின்ற, விற்பனை செய்கின்ற அல்லது ஏதேனும் முறையில் அதனைக் கையாளுகின்ற;

(ஆ) கொள்வனை அல்லது விற்பனை செய்ய அல்லது ஏதேனும் முறையில் அதனைக் கையாள கொடை முனைவுசெய்கின்ற; அல்லது

(இ) விடயப் பொருளை அல்லது அதன் கருத்தை இறக்கம் செய்கின்ற, மேலேற்றம் செய்கின்ற, பிரதி செய்கின்ற அல்லது பெறுகின்ற, ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஓரிலட்சம் ரூபாவுக்கு குறையாததும் மூன்றிலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு குறையாததும் மூன்று ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

விளக்கம்

9ஆம் 10ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக -

(அ) தவறாளர் கணினியின் அணுக்கத்திற்கு அதிகாரம் பெற்றிருந்தார் அல்லது பணியைப் புரிவதற்கு அதிகாரம் பெற்றிருந்தார் என்பது பொருட்டல்ல ;

(ஆ) தவறாளர் குறிப்பான எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்திற்கு நட்டம் அல்லது சேதம் விளைவிக்கும் சாத்தியமுள்ளதென உளக்கருத்தைக் கொண்டிருந்திருக்கவோ அல்லது அறிவை கொண்டிருந்திருக்கவோ தேவையில்லை.

8. அறிந்திருந்தும் அல்லது சட்டமுறையான அதிகாரமின்றி -

(அ) கணினியொன்றுக்கு அதிலிருந்து அல்லது அதற்குள் ஏதேனும் ஒப்பப்பணம் செலுத்துநரின் தகவல், போக்குவரத்துத் தரவு அல்லது ஏதேனும் தொடர்பாடல் எதனையும் ; அல்லது

(ஆ) ஏதேனும் தகவலைக் காவியிருக்கும் கணினியொன்றிலிருந்து ஏதேனும் மின்காந்த உமிழ்வுகளை,

குறுக்கீடு செய்கின்ற, ஆளெவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஓரிலட்சம் ரூபாவுக்கு குறையாததும் மூன்றிலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களுக்குக் குறையாததும் மூன்று ஆண்டுகளை விஞ்சாததுமான காலப்பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

9. சட்டமுறையான காரணமின்றி -

(அ) கணினியொன்று அல்லது கணினிச் செய்நிரல் உட்பட உபாயம் ஒன்றை ;

(ஆ) கணினி முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அணுகும் ஆற்றலுடைய கணினிக் கடவுச்சொல் ஒன்றை, அணுகுக்குறியை அல்லது அதனையொத்த தகவலை,

அது, இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரியும் நோக்கத்திற்கான எவரேனும் ஆளினால் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற முன்னத்துடன் தயாரிக்கின்ற, விற்பனை செய்கின்ற, பாவனைக்குப் பெறுகின்ற, இறக்குமதி செய்கின்ற, ஏற்றுமதி செய்கின்ற, விநியோகிக்கின்ற அல்லது வேறுவகையில் கிடைக்கச் செய்கின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓரிலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் மூன்றிலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு குறையாததும் மூன்று ஆண்டுகளை விஞ்சாததுமான காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

10. கணினியொன்றின் வாயிலாக வழங்கப்படும் ஏதேனும் சேவையை அணுகுவதைத் தமக்கு இயலச் செய்யும் தகவல் பொறுப்பிக்கப்பட்டவராக , அவ்வாறு செய்வதற்கு வெளிப்படையான அதிகாரம் எதுவுமின்றி அல்லது வெளிப்படையான அல்லது உட்கிடையான ஏதேனும் ஒப்பந்தத்தை மீறி அத்தகைய தகவலை வெளியிடுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஓரிலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் மூன்றிலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களுக்குக் குறையாததும் மூன்று ஆண்டுகளை விஞ்சாததுமானதொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

11. இச்சட்டத்தின் பிரிவுகள் 3,4,5,6,7,8,9,10,11,12,13 அத்துடன் 14 என்பவற்றின் கீழ் தவறொன்றைப் புரிய எத்தனிக்கின்ற அல்லது அத்தகைய தவறொன்றைப் புரியச் செய்விக்கின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட அதிகபட்ச குற்றப்பணத்தின் அரைவாசியை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய தவறுகளுள் ஒவ்வொன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்ட அதிகபட்ச காலப்பகுதியின் அரைவாசிக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைப குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

12. (1) இச் சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிவதற்கு உடந்தையாயிருக்கும் ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் -

(அ) உடந்தையாக இருந்ததன் விளைவாகவே தவறுபுரியப்பட்டதெனின் தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்டவாறான அதே தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) தவறுபுரியப்பட்டமை உடந்தையாக இருந்ததன் விளைவாகவல்லவெனின் -

(i) அதிகபட்ச குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனைக் காலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவிடத்து தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட அதிகபட்ச குற்றப்பணத்தின் நாலிலொரு பங்கை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு தவறுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட அதிகபட்ச காலப்பகுதியின் நாலிலொரு பங்குக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்; அத்துடன்

(ii) அதிகபட்ச குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனை ஏற்பாடு செய்யப்படாதவிடத்து அல்லது அதிகபட்ச காலப்பகுதி ஆயுட்கால மறியற்றண்டனையாக இருக்குமிடத்து, இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) "உடந்தை" என்னும் சொற்பதம் (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 100ஆம், 101ஆம் பிரிவுகளிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவைப் பிரிவு 101அ, 103,104,105,106 மற்றும் 107 என்பனவற்றின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுக்கு உடந்தையாயிருத்தல் தொடர்பில், ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

13.(1) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிவதற்கு சூழ்ச்சி செய்யும் ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் அத்தவறைப் புரிய உடந்தையாயிருப்பதற்கு விதித்துரைக்கப்பட்ட தண்டனையால் தண்டிக்கப்படுவதற்கு ஆளாதலும் வேண்டும்.

(2) "சூழ்ச்சி செய்தல்" என்னும் சொற்பதம் (19ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 113 அ என்னும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அப்பிரிவின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் தவறைப் புரிவதற்கான சூழ்ச்சி தொடர்பில், ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதலும் வேண்டும்.

14. (1) ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்தும் அத்துடன் அத்தகைய தவறு புரியப்பட்டதன் விளைவாக -

(அ) எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்திற்கு நட்டம் அல்லது சேதம் ஏற்பட்டது; அல்லது

(ஆ) தவறாளருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்குப் பண ஆதாயம் திரண்டது,

எனத் தாபிக்கப்படுமிடத்தும் நீதிமன்றமானது தவறாளருக்கு விதிக்கப்படக்கூடியவேறு ஏதேனும் தண்டனைக்கு மேலதிகமாக, விடயத்திற்கேற்ப -

(i) எந்த ஆளிற்கு அல்லது நிறுவனத்திற்கு நட்டம் அல்லது சேதம் உறப்பட்டதோ அந்த ஆளுக்கு அல்லது நிறுவனத்திற்கு தவறாளரால் நட்டஈட்டின்; அல்லது

(ii) தவறாளரால், அரசுக்கு அவ்வாறு திரண்ட பண ஆதாயத்தின் பெறுமதிக்குச் சமமான பணத் தொகையின்,

கொடுப்பனவுக்குக் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(2) கொடுப்பனவுக்கென (1)ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று, அத்தகைய கட்டளை விடயத்துக்கேற்ப, எந்த ஆளினால் அல்லது நிறுவனத்தினால் நட்டம் அல்லது சேதம் உறப்பட்டதோ அந்த ஆளுக்கு அல்லது நிறுவனத்திற்கு அல்லது அரசுக்குச்சாதகமாக மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்வையொன்று என்றாற்போன்று வலுவுக்கு இடப்படுதல் வேண்டும்.

(3) பாதிக்கப்பட்டவரால் கணிக்கப்பட்டவாறான நட்டஈட்டு அளவின் பதிவொன்று அத்துடன் நட்டஈட்டின் அளவானது, நிபுணரின் கருத்தில் ஏற்படுத்தப்பட்ட நட்டத்திற்கு அல்லது சேதத்துக்கு அல்லது திரண்ட ஆதாயத்தின் பணப்பெறுமதிக்கு விகிதாசாரமாகவுள்ளது என்ற கூற்றொன்றும் உள்ளடக்கிய நிபுணர் ஒருவரின் கைப்பட்ட சான்றிதழொன்று சான்றில் ஏல்தகவாதல் வேண்டும் என்பதுடன், அதன்கண் எடுத்துரைக்கப்பட்ட நிகழ்வுகளின் முதற்தோற்றளவிலான எண்பிப்பாதலும் வேண்டும்.

(4) எவரேனும் ஆளுக்கு அல்லது நிறுவனத்திற்குச் சாதகமாக நட்டஈட்டின் கொடுப்பனவுக்காக (1)ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்று, அக்கட்டளையின்கீழ் செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகைக்கு அப்பால் சேதங்களை அறவிடுவதற்கென அவ்வாளின் அல்லது நிறுவனத்தின் குடியியல் நிவாரணமொன்றிற்கான உரிமை எதனையும் தடைசெய்தலோ பங்கப்படுத்துதலோ ஆகாது:

ஆயின், எவ்வாறாயினும் குடியியல் நிவாரணமொன்று தொடர்பிலான ஏதேனும் வழக்கை ஆரம்பிப்பதற்குக் காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 68) குறித்துரைக்கப்பட்ட காலவரையானது (1)ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையின் தேதியில் இருந்து மட்டுமே கணிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் II

## புலனாய்வுகள்

15. இச்சட்டத்தால் வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர இச் சட்டத்தின் கீழான எல்லாத் தவறுகளும் 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கப் புலனாய்வு செய்யப்படுதல், விளங்கப்படுதல் அல்லது வேறுவகையில் கையாளப்படுதல் வேண்டும்.

16. இச்சட்டத்தின் கீழான தவறு ஒவ்வொன்றும் 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கத்திற்காகவும் பிடியாணையின்றி கைது செய்யப்படற்பாலதான தவறொன்றாதல் வேண்டும்.

17. (1) விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் இச்சட்டத்தின்கீழ் தவறொன்று தொடர்பான புலனாய்வில் எவரேனும் பொலிசு அலுவலருக்குத் துணைபுரிவதற்கென இலத்திரனியல் பொறியியல் அல்லது மென்பொருள் தொழில் நுட்பவியலில் தேவையான தகைமையினைக் கொண்ட எவரேனும் பகிரங்க அலுவலரை (இதனகத்துப் பின்னர் "ஒரு நிபுணர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) வர்த்தகமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் நியமிக்கலாம்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்கு "நிபுணர்" என்பது -

(அ) விதித்துரைக்கப்பட்ட தகைமையைக் கொண்டவரும் அத்துடன் இயைபான பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவருமான ஏதேனும் பல்கலைக்கழகப் பணியாட்டொகுதியின் எவரேனும் உறுப்பினரையும்;

(ஆ) இயைபான பல்கலைக்கழகத்தின் அபிப்பிராயப்படி விதித்துரைக்கப்பட்ட தகைமைகளைக் கொண்டுள்ளதும் அத்தகைய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தையும் உள்ளடக்கும்:

ஆயின் மேலேயுள்ள பந்தி (அ) அல்லது (ஆ) என்பதன் நியதிகளின்படி "நிபுணர்" ஒருவரை இனங்காண முடியாதவிடத்து, அமைச்சர் இயைபான பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருடனான கலந்தாலோசனையுடன் விதித்துரைக்கப்பட்ட தகைமையைத் திருப்திப்படுத்தும் வேறு ஏதேனும் நிறுவனத்தை நியமிக்கலாம் :

(இ) "பல்கலைக்கழகம்" என்பது 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகம் என்று பொருள்படும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் நிறைவேற்றப்பட வேண்டும் என தேவைப்படுத்தப்பட்ட (இலத்திரனியல் பொறியியலில் அல்லது மென்பொருள் பொறியியலில் நிபுணத்துவத்தின் குறித்துரைக்கப்பட்ட துறைகளை கருத்திற்கொண்டு) தகைமைகளும் அனுபவமும் மற்றும் நியமன முறையும் விதமும் அத்துடன் அத்தகைய அலுவலரின் நியமனம் தொடர்பிலான நிபந்தனைகளும் ஒழுங்கு விதியால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் கீழ் புலனாய்வொன்றின் நோக்கத்திற்கு எவரேனும் பொலிசு அலுவலருக்குத் துணைபுரியுமாறு அழைக்கப்பட்ட நிபுணர் ஒருவர் -

(அ) துணைப் பரிசோதகர் ஒருவரின் பதவி வரிசைக்குக் குறையாத பொலிசு அலுவலர் ஒருவருடன் எவையேனும் வளவுகளினுட் பிரவேசிப்பதற்கும்:

(ஆ) அத்தகைய கணினியில் வைத்திருக்கப்படும் ஏதேனும் தகவல் முறைமைக்கு, கணினிக்கு அல்லது கணினி முறைமைக்கு தரவுக்கு அல்லது தகவலுக்கு அணுக்கம் பெறுவதற்கும் ஏதேனும் பணியைப் புரிவதற்கு அல்லது அதனைப் போன்றே வேறு ஏதேனும் விடயத்தைச் செய்வதற்கு:

(இ) ஏதேனும் போக்குவரத்துத்தரவை வெளிப்படுத்துமாறு எவரேனும் ஆளை தேவைப்படுத்துவதற்கு

(ஈ) எவரேனும் ஆளை வாய்மொழியாக விசாரணை செய்வதற்கு

(உ) இச் சட்டத்தின் நோக்கத்திற்கு நியாயமானமுறையில் தேவைப்படுத்தக் கூடியவாறான வேறு விடயங்களைச் செய்வதற்கு

தத்துவமுடையவராதல் வேண்டும்.

(5) நிபுணர் ஒருவருக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடான கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியம் வழங்கப்படலாம்.

(6) நிபுணர் ஒருவர் இச் சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புலனாய்வு செய்வதில் எவரேனும் பொலிசு அலுவலருக்குத் துணைபுரிவதற்கு அழைக்கப்படலாம் என்பதுடன் அத்தயை புலனாய்வின் நோக்கங்களுக்குத் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய எல்லா உதவிகளையும் புரிவது குறித்தொதுக்கப்பட்ட நிறுவனத்தின் அலுவலர்களது கடமையாதலும் வேண்டும். புலனாய்வொன்றின் கண்டுபிடிப்புக்களின் விளைவாந்தன்மையதாக எவையேனும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளவிடத்து அத்தகைய நடவடிக்கைகளின் நோக்கத்திற்கு ஏதேனும் தகவல், தரவு, விடயம் அல்லது அத்தகைய புலனாய்வின்பொழுது அவரால் பெறப்படக்கூடிய வேறு விடயம் எதனையும் கிடைக்கச்செய்வது குறித்தொதுக்கப்பட்ட நிறுவனத்தின் அலுவலர்களின் கடமையாதல் வேண்டும்.

18. (1) நிபுணர் ஒருவர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவர் அத்தகைய நோக்கத்திற்கென ஆக்கப்பட்ட விண்ணப்பத்தின்மேல், நீதிவானொருவரினால் அதன் சார்பில் வழங்கப்பட்ட ஆணையொன்றின் அதிகாரத்தின் கீழ் இச்சட்டத்தின் கீழான புலனாய்வென்றின் நோக்கங்களுக்கென:-

(i) எவரேனும் சேவை வழங்குநர் ஒருவரின் உடைமையிலுள்ள ஒப்பப்பண செலுத்துநர் பற்றிய தகவல் மற்றும் போக்குவரத்துத் தரவு உட்பட ஏதேனும் தகவலைப் பெறலாம்; அல்லது

(ii) ஏதேனும் கம்பியை அல்லது மின்னணுத் தொடர்பாடலை அத்தகைய தொடர்பாடலில் ஏதேனும் கட்டத்தில் ஒப்பப்பண செலுத்துநர் பற்றிய தகவல் மற்றும் போக்குவரத்துத் தரவு உட்பட இடைமறிப்புச் செய்யலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நிபுணர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவர் -

(அ) புலனாய்வுகள் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பின் ;

(ஆ) சான்று இழக்கப்படக்கூடிய, அழிக்கப்படக்கூடிய , திரிபுபடுத்தப்படக்கூடிய அல்லது அணுக முடியாத தாககப்படக்கூடிய சாத்தியக்கூறு இருப்பின்

(இ) புலனாய்வுகள் தொடர்பாக அந்தரங்கத்தைப் பேணவேண்டியதன் அவசியம் இருப்பின்

ஆணையொன்றில்லாமல் அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லாத் தத்துவங்களையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம்.

(3) 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டகோவைச் சட்டத்தின் 36ஆம், 37ஆம், 38ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு ஆளொருவரைக் கைது செய்தல் தொடர்பில் ஏற்புடைத்தாதலாகாது.

(4) அமைச்சர் இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் புலனாய்வின் நோக்கத்திற்காக போக்குவரத்துத் தரவு உட்பட தரவையும் தகவலையும் தடுத்து வைத்தலுக்கும் மற்றும் இடையீடு செய்தலுக்குமான முறையையும் அவை தொடர்பில் பின்பற்றப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட நடவடிக்கை முறைகைளையும் ஒழுங்குவிதியின் மூலம் விதித்துரைக்கலாம்.

19. (1) நிபுணர் ஒருவர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவர் கணினியொன்றில் தேக்கிவைக்கப்பட்டுள்ள ஏதேனும் தகவல் இச் சட்டத்தின்கீழ் புலனாய்வொன்றின் நோக்கங்களுக்கு நியாயமாகத் தேவைப்படுகின்றது எனவும் அத்தகைய தகவல் இழக்கப்படக் கூடிய அழிக்கப்படக்கூடிய, திரிபுபடுத்தப்படக்கூடிய அல்லது அணுகமுடியாததாக்கப்படக்கூடிய ஆபத்திருக்கின்றதெனவும் திருப்திப்படுமிடத்து, அவர் எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய அறிவித்தலில் விதித்துரைக்கப்படக் கூடியவாறான ஏழு(07) நாட்களை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்கு தகவல் பேணிக்காக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு அத்தகைய கணினியை அல்லது கணினி முறைமையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(2) நியாயாதிக்கத்தைத் கொண்டுள்ள நீதிவானொருவருக்குச் செய்யப்படும் விண்ணப்பமொன்றின்மீது எந்தக் காலப்பகுதிக்கு தகவல் பேணிக்காக்கப்படவேண்டுமோ அத்தகைய காலப்பகுதி அத்தகைய மேலும் ஒரு காலப்பகுதிக்கு நீடிக்கப்படலாம். இது கூட்டு மொத்தமாக தொண்ணூறு நாட்களை விஞ்சுதலாகாது.

20. புலனாய்வொன்றின்போது ஏதேனும் தேடுதலை பரிசோதனையை மேற்கொள்ளுகின்ற அல்லது இவேறு ஏதேனும் செயலைச் செய்கின்ற பொலிசு அலுவலா் ஒவ்வொருவரும் அத்துடன் நிபுணா் ஒவ்வொருவரும் சட்டமுறையான எந்தத் தொழிலுக்கு ஏதேனும் கணினி பயன்படுத்தப்படக்கூடுமோ அந்த சட்டமுறையான தொழிலின் சாதாரண நெறிமுறை அத்தகைய தேடுதலால் பரிசோதனையால் அல்லது புலனாய்வால் தடைப்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், கணினி எந்தத் தொழிலுக்கு பயன்படுத்தப்படுகின்றதோ அந்தத் தொழிலின் சாதாரண நெறிமுறையை நாடத்துவதனை அத்தகைய கைப்பற்றுகை பங்கப்படுத்துமாயின் -

(அ) அத்தகைய கணினி, கணினி முறைமை அல்லது அதன் பாகம் எந்த வளவுகளில் அமைந்துள்ளதோ அந்த வளவுகளில் தேடுகையை மேற்கொள்வது சாத்தியமில்லாதிருந்தாலன்றி; அல்லது

(ஆ) தவறு புரியப்படுவதை அல்லது தவறு தொடா்ந்து நடைபெறுவதைத் தடுப்பதற்கு அல்லது வேறு வகையில் இழக்கப்படகூடிய, அழிக்கப்படகூடிய, திரிபுபடுத்தப்படகூடிய அல்லது அணுகமுடியாததாக்கப்படக் கூடிய ஏதேனும் தகவலின் கட்டுக்காப்பைப் பெறுவதற்கு அத்தகைய கணினியை, கணினிமுறைமையை அல்லது அதன் பாகத்தை கைப்பற்றுவது அத்தியாவசியமாக இருந்தாலன்றி, ஏதேனும் கணினியை, கணினி முறைமையை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை கைப்பற்றுதலாகாது.

21. (1) பொலிசு அலுவலா் எவரும் இச்சட்டத்தின்கீழ் புலனாய்வென்றின் பொழுது கைது செய்வதற்கான, தேடுதல் செய்வதற்கான அல்லது ஏதேனும் வளவுகளினுள் அணுகக்கூடிய ஏதேனும் தகவலைக் கைப்பற்றுவதற்கான தத்துவங்களை சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் பிரயோகிக்கலாம்:

ஆயினும், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிவதாக சந்தேகிக்கப்பட்ட ஆளொருவரை ஒரு பிடியாணையின்றி கைதுசெய்யும் பொலிசு அலுவலா் ஒருவா், கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து நீதிவானின் முன்னிலைக்குப் பயணம் செய்வதற்கு எடுக்கும் நேரம் புறநீங்கலாக, அநாவசியமான தாமதமின்றியும் அவ்வாறு கைதுசெய்யப்பட்டதிலிருந்து இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்குள்ளும் அத்தகைய ஆளை சந்தேக நபா் கைதுசெய்யப்பட்ட இடத்திற்கு மிக அருகிலுள்ள நீதிவான் நீதிமன்றத்தின் முன்கொண்டு வருதல் வேண்டும்.

(2) பொலிசு அலுவலா் எவரும், அத்தகைய பொலிசு அலுவலருக்கு தகவல் தொடா்புத் தொழில்நுட்பத் துறையில் போதியளவு அறிவும் தோ்ச்சியும் உண்டு எனவும் அதன் மூலம் அத்தகைய பணியைப் புரிவதற்குத் தேவையான நிபுணத்துவத்தை கொண்டுள்ளாா் எனவும் பொலிசு பரிசோதகா் தலைமையதிபதி எழுத்தில் அத்தாட்சிப்படுத்தினாலன்றி, அத்தகைய பொலிசு அலுவலா் இச் சட்டத்தின் கீழ் புலனாய்வொன்றின் நோக்கத்திற்கு ஏதேனும் கணினிக்கு அணுக்கம் பெறுதலாகாது.

22. (1) புலனாய்வொன்றின்போது ஏதேனும் பொருள் அல்லது தரவு கைப்பற்றுள்ளவிடத்து அல்லது அணுக முடியாத தாக்கப்பட்டுள்ளவிடத்து தேடுகையை நடாத்தும் பொலிசு அலுவலா் அத்தகைய கைப்பற்றுகையின் அல்லது அதனை அணுகமுடியாததாக்கப்பட்ட தேதியும் நேரமும் உட்பட அத்தகைய பொருட்களினதும் தரவுகளினதும் முழுமையான நிரலொன்றை கணினியின் அல்லது கணினிமுறைமையின் சொந்தக்காரருக்கு அல்லது அதற்குப் பொறுப்பான ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.

(2) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக பொலிசு அலுவலா் ஒருவா், கனனியின் அல்லது கணினி முறைமையின் சொந்தக்காரரால் அல்லது அதற்குப் பொறுப்பான ஆளினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது அத்தகைய கணினி தரவின் பிரதி ஒன்றை அத்தகைய ஆளுக்கு வழங்குவதற்கு அத்தகைய சொந்தக்காரரால் அல்லது ஆளினால் பெயா் குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவரை அனுமதிக்கலாம்.

(3) அத்தகைய அனுமதி ஏதேனும் குற்றவியல் புலனாய்வுக்கு அல்லது வழக்கு நடவடிக்கைக்கு பங்கமேற்படுத்துமென தோன்றினால் பொலிசு அலுவலா் ஒருவா் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அனுமதி வழங்குதலோ அல்லது அத்தகைய பிரதிகளைக் கொடுத்தலோ ஆகாது.

23. (1) இச் சட்டத்தின் கீழான புலனாய்வொன்றில் ஏதேனும் வெளிப்படுத்தலைச் செய்யுமாறு அல்லது துணைபுரியுமாறு தேவைப்படுத்தப்பட்ட ஆளெவரும் அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) புலனாய்வொன்றின்பொழுது, நிபுணா் ஒருவருக்கு அல்லது பொலிசு அலுவலா் ஒருவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் சட்டபூா்வமான பிரயோகத்தை தடுக்கின்ற அல்லது அத்தகைய நிபுணரால் அல்லது பொலிசு அலுவலரால் விடுவிக்கப்பட்ட வேண்டுகோளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொருவா் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீா்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது ஓராண்டிற்குக் குறையாததும் இரண்டாண்டுகளுக்கு மேற்படாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

24. (1) இச்சட்டத்தின்கீழ் புலனாய்வொன்றில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வோராலும் அத்தகைய புலனாய்வின்போது அவரது அறிவுக்கு எட்டக்கூடிய எல்லாத் தகவல் தொடா்பிலும் கண்டிப்பான அந்தரங்கத் தன்மையைப் பேணுதல் வேண்டும் என்பதுடன், இச் சட்டத்தின் கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றுகையிற் தவிர அவ்வாறு பெறப்பட்ட ஏதேனும் தகவலை எவரேனும் ஆளுக்கு வெளிப்படுத்தலோ அல்லது எத்தன்மையினதுமான ஏதேனும் நோக்கத்திற்குப் பயன்படுத்துதலோ ஆகாது.

(2) எந்தச் சேவை வழங்குனரிடமிருந்து ஏதேனும் தகவல் கோரப்பட்டுள்ளதோ அல்லது பெறப்பட்டுள்ளதோ அந்தச் சேவை வழங்குநர் ஒவ்வொருவரும் அத்துடன் ஏதேனும் தகவலைப் பேணிக்காப்பதற்கு எந்த ஆளுக்கு எழுத்திலான அறிவித்தல் வழங்கப்பட்டு உள்ளதோ அந்தஆள் ஒவ்வொருவரும் அத்தகைய தகவல் தொடர்பிலும் அத்தகைய தகவல் கோரப்பட்டுள்ளது, பெறப்பட்டுள்ளது அல்லது பேணிக்காக்குமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ளது என்ற நிகழ்வு தொடர்பிலும் கண்டிப்பான அந்தரங்கத் தன்மையைப் பேணுதல் வேண்டும், அத்துடன் சட்டபூர்வமான அதிகாரத்துடன் தவிர அத்தகைய விடயங்கள் தொடர்பில் வெளிப்படுத்துகை எதனையும் செய்தலாகாது.

(3) சேவை வழங்குநர் ஒருவர் இச்சட்டத்தின் கீழான புலனாய்வுவொன்றின் நோக்கங்களுக்காக ஏதேனும் தரவை அல்லது வேறு தகவலை வெளிவிடுவதற்காக குடியியல் அல்லது குற்றவியல் சட்டத்தின்கீழ் நடவடிக்கைக்களாக்கப்படுதலாகாது.

(4) ஓராம்,(2)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளெவரும் தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டும் என்பதுடன்,குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

## பாகம் III

## நானாவிதம்

25. இச் சட்டத்தின் கீழான எல்லாத் தவறுகளையும் கேட்டு விளங்குவதற்கும் தீர்மானிப்பதற்கும் ஆன நியாயாதிக்கம் மேல் நீதிமன்றத்திற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் கீழான தவறொன்று புரியப்படுவது தொடர்பில் 1977ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, நாடு கடத்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகுமிடத்து, கொழும்பில் நடாத்தப்படும் மேல்நீதிமன்றம் அத்தகைய தவறைக் கேட்டு விளங்குவதற்கும் தீர்மானிப்பதற்குமான புறநீங்கலான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

26. (1) விடயத்திற்கேற்ப நிபுணர் ஒருவரால் அல்லது பொலிசு அலுவலர் ஒருவரால் முறையாக கையொப்பமிடப்பட்டு வழங்கப்பட்டதும் மற்றும் நிபுணர் ஒருவரால் விதித்துரைக்கப்பட்ட முறையில் முறையாகச் சான்றுறுதி செய்யப்பட்டதுமான ஆவணம் ஒவ்வொன்றும் சான்றாக ஏல்தகவாதல் வேண்டும் என்பதுடன், அதன்கண் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் முதற்றோற்றத்தளவிலான சான்றாதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்கு 'ஆவணம்' என்னும் சொல்லமைப்பு ஒரு சான்றிதழை, வெளிப்படுத்துகையை, தகவலை, தரவை, அறிக்கையை அல்லது இதனையொத்த வேறு ஏதேனும் ஆவணத்தை உள்ளடக்கும்.

27. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8ஆம் இலக்க, நாடுகடத்தல் சட்டத்திற்கான அட்டவணை அதன் பாகம் 'ஆ' என்பதற்கு உடன்முன்னர் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"(49) 2007ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, கணினி வழிக் குற்றச்சட்டத்தின் நியதிகளின்படி புரியப்பட்ட தவறொன்று.".

28. இச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளைப் பின்பற்றி விடயத்திற்கேற்ப, அத்தகைய நிபுணரால் அல்லது பொலிசு அலுவலரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட சட்டமுறையான ஏதேனும் செயலுக்காக இச்சட்டத்தின் நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட "நிபுணர்" ஒருவர் அல்லது பொலிசு அலுவலரொருவருக்கு எதிராக குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு எதுவும் தொடரப்படுதலாகாது.

29. நிபுணர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றுகையில் -

(அ) 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கத்திற்காகவும் "சமாதான அலுவலர்" அத்துடன்

(ஆ) (அத்தியாயம் 19) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கத்திற்காகவும் "பகிரங்க அலுவலர்" ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

30. இச்சட்டத்தின் கீழ் ஆட்களின் குழுவொன்றினால் தவறொன்றுப் புரியப்படுமிடத்து, அந்த ஆட்களின் குழு -

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாயின், கூட்டிணைக்கப்பட்ட அக்குழுவின் பணிப்பாளர் மற்றும் அலுவலர் ஒவ்வொருவரும்; அல்லது

(ஆ) கழகமொன்றாயின் அக்கழகத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்; அல்லது

(இ) கழகமொன்றைத் தவிர கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாயின் அக்குழுவின் முகாமைத்துவத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் பொறுப்பாக அதன் அலுவலர் ஒவ்வொருவரும்,

அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய ஆளெவரும் அத்தகைய தவறு அவரது அறிவுக்கு எட்டாமலேயே புரியப்பட்டதென அல்லது அத்தகைய

## 2007ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டம்

[2007ஆம் ஆண்டு யூலை மாதம் 18ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

**2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டம்**

1. இச்சட்டம், 2007ஆம் ஆண்டின் 27ஆம்இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் 12ஆம் பிரிவு அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் "1996ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, சமூக பாதுகாப்புச்சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சமூக பாதுகாப்புச்சபை தொடர்பிலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "1996 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, சமூக பாதுகாப்புச்சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சமூக பாதுகாப்புச் சபை தொடர்பிலும் 2006ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தொடர்பிலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

> "(1அ) மீள் காப்புறுதி செய்கின்ற காப்புறுதியாளர் ஒவ்வொருவரும் அத்தகைய; அத்துடன் காப்புறுதியாளரால் மீள் காப்புறுதி செய்யப்படவேண்டுமென நாடப்படும் பொறுப்புடைமையின் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையால் அமைச்சரினால் தீர்மானிக்கப்பட வேண்டியவாறான ஐம்பது சதவீதத்திற்கு மேற்படாத சதவீதமொன்றை 2006ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சபையுடன் மீள்காப்புறுதி செய்யுமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்".

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2007ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டம்

[2007ஆம் ஆண்டு யூலை மாதம் 18ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

**2006ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

1. இச்சட்டம், 2007ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்பட லாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்னும் சட்டத்தின் 6ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

> "(ஈஈ) 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்துதற் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிச்சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி ;".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "மூன்று உறுப்பினர்களாதல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்து உறுப்பினர்களாதல்"என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11ஆம் பிரிவு அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(ஈஈ) காப்புறுதித் தொழிலைக் கொண்டு நடாத்தும் எவரேனும் ஆளினால் பயனுறுத்தப்பட்ட அல்லது வழங்கப்பட்ட காப்புறுதி ஒப்பந்தத்திலிருந்து அல்லது பத்திரத்திலுமிருந்து எழுகின்ற ஏதேனும் பொறுப்புடைமையின் மீள் காப்புறுதியை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்;

"(ஈஈஈ) சபையால் பயனுறுத்தப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் காப்புறுதி ஒப்பந்தத்தில் அல்லது பத்திரத்திலிருந்து எழுகின்ற ஏதேனும் பொறுப்புடைமையை இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் காப்புறுதியாளருடன் மீள் காப்புறுதி செய்யலாம்; ".

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2007ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டம்

[2007ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

## 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதி குத்தகைக்குவிடுதல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 2007ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இரண்டாயிரமாம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதி குத்தகைக்கு விடுதல் சட்டத்தின் 34ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 34அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும் :-

"குறித்த சில பதிவு செய்யப்பட்ட நிதி குத்தகைக்குவிடும் தாபனங்கள் தனிசுச் சாதனங்களின் வழங்கீட்டின் மூலம் கடனெடுத்தல்.

34அ. (1) வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் (இ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டதும் -

(அ) அதன் சார்பில் வழங்கப்பட்ட அறிவித்தல் மூலம் பணிப்பாளரால் காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தொகைக்குக் குறையாத தணிக்கப்படாத, வழங்கப்பட்டதும் செலுத்தப்பட்டதுமான மூலதனமொன்றைப் பேணுகின்றதும் பகிரங்கக் கம்பெனியொன்றாக இருக்கிறதுமான ஒரு பதிவுசெய்யப்பட்ட நிதி குத்தகைக்குவிடும் தாபனமொன்று ஏதேனும் தனிசுச் சாதனத்தின் வழங்கீட்டனால்; அல்லது

(ஆ) (அ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தொகைக்குக் குறையாத தணிக்கப்படாத, புத்தகங்கள் உட்பட பொதுசன ஊடகத்தின் ஊடக விளம்பரமோ அல்லது எத்தன்மையானதுமான ஏதேனும் வழிமுறைகளால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் விதமான பிரசாரமோ இல்லாமல் ஏதேனும் தனிசுச் சாதனத்தின் வழங்கீடு என்று பொருள்படும்.".

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படுகின்றவிடத்தில், , சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.